## சிறிய காடுகளின் உற்பத்திப் பொருட்கள்

### (இனம் - 7)

மாநிலத்தின் வனப்பொருட்களிலிருந்து கிடைக்கும் வருவாய் ரூ.50 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அது ஆறு முக்கிய இனங்களிலிருந்து பெறப்படுகின்றது. அவையாவன: கூழ்மரங்கள் (30%) சந்தன மரங்கள் (50%) சமூகக் காடுகள் விறகு (7%) வெட்டு மரம் (3%) சிறுவனப் பொருட்கள் (3%) மற்றும் இதர இனங்கள் (7%). சிறுவனப் பொருட்களைச் சேகரிப்பது வணிக நோக்கத்தில் மட்டும் நடைபெறுகிறது அல்ல. வனப்பகுதியில் வாழும் கிராம மக்கள் மற்றும் பழுங்குடியினரின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஆதரவு அளிக்கும் வகையில் சிறுவனப் பொருட்களைச் சேகரித்து விற்பனை செய்வதே அடிப்படைக் கொள்கையாகும்.

02. சிறுவனப் பொருட்கள் பல வகைகளைக் கொண்டதாகும். அவற்றில் புளி, கறிவேப்பிலை, பிரம்பு, சீயக்காய், சோப்புக்காய் முதலியன முக்கியமானது. சிறுவனப் பொருட்களைச் சேகரிப்பதற்காக குத்தகை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடிகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விடப்படுகின்றது. தமிழ்நாடு வனத்துறை விதித்தொகுப்பின் பிரிவு 130(4)இன் கீழ் நியாய விலைக்கு குறைவாக 10 விழுக்காடு சலுகை வீதத்தில் தொகை அறுதியிடப்படுகிறது.

இக்கூட்டுறவுச் சங்கங்கள் இச்சலுகையைத் தவறாகப் பயன்படுத்தினாலோ அலகுகளை ஏற்றுக் கொள்ள விருப்பப்படாவிட்டாலோ இச்சிறுவனப் பொருட்கள் பொது ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் அல்லது வனத்துறையே சேகரிப்பை மேற்கொள்ளும். சமீப காலங்களில், பண்ணை மேலாண்மை அடிப்படையில் புளிய மரக்கன்றுகளை தீவிர முனைப்புடன் நடுவதில் திட்டம் ஒன்றை தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் வனத்துறை மேற்கொள்கிறது. அதன் விளைவாக புளிய மரத்திலிருந்து கிடைக்கும் வருவாய் கணிசமான அளவில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

03. மாநிலத்திலுள்ள வனப்பகுதியில் சுமார் 5.20 இலட்சம் பழங்குடியினர் வசிக்கின்றனர். பழங்குடியினரின் மக்கள் தொகை மாநிலத்தில் பரவலாக இருந்த போதிலும், ஒருங்கிணைந்த பழுங்குடியினர் மேம்பாட்டுத் பணிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்ய ஐந்து மாவட்டங்கள் மட்டுமே இந்திய அரசால் கண்டறியப்பட்டுள்ளன. கண்டறியபட்டுள்ளன. கண்டறியப்பட்டுள்ள ஐந்து மாவட்டங்களில் (அதாவது திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு, வட ஆற்காடு, தருமபுரி மற்றும் சேலம்) வாழும் பழங்குடியினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த காடு வளர்ப்பு, தற்போது உள்ள சாலைகளைப் பராமரித்தல், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் பழங்குடியினர் கிராமக் காடுகள் போன்ற திட்டங்களைச் செயற்படுத்துகின்றன. பத்தொன்பது கூட்டுறவுச் சங்க்ங்கள் அமைக்கபட்டு சிறுவனப் பொருட்கள் பழங்குடியினர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. பழங்குடியின மக்கள் தங்களின் அத்தியாவசிய தேவைகளுக்காக மூங்கில், பிரம்பு மற்றும் சிறுதடிமரங்கள் போன்ற மூலப் பொருட்களை சலுகை விலையில் வாங்கிக் கொள்ளவும், அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களின் இல்லம் மற்றும் வேளாண்மை நோக்கத்திற்காகச் சிறு மரத்தடிகள், விறகுகள் மற்றும் சிறுவனப் பொருட்களை இலவசமாக எடுத்துச் செல்வதற்கும், அவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

04. 1996 ஆம் ஆண்டு ஊராட்சி (குறிப்பிடப்பட்ட பகுதிகளுக்கு விரிவாக்கப்பட்டது). சட்ட விதிகளின்படி சிறுவனப் பொருட்களைக் குறிப்பிட்ட பகுதியிலுள்ள ஊராட்சிகளுக்கும், கிராமச் சபைகளுக்கும் உரிமையாக்கத் தேவையான சட்டங்களை இயற்றுவதற்கு மாநிலச் சட்ட மன்றங்களுக்கு அதிகாரமளிக்க இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளன. இயற்றிய இச்சட்ட விதிகளை, குறிப்பிட்ட பகுதிகளில் (குறிப்பாக பழங்குடியினர் ஊராட்சி ஒன்றியங்களில்) பயன்களை நீட்டிபதற்கு, 1996–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் சேர்க்க வேண்டிய தேவையுள்ளது. ஒரே சீராக இருக்கும் பொருட்டு பிற அனைத்து பகுதிகளில் உள்ள வனப் பொருட்களைச் சேகரிப்பதற்கு இதைப் போன்ற வசதிகளை நீட்டிக்கவும் செய்யலாம்.

சிறிய காடுகளின் உற்பத்திப் பொருட்கள் என்ற தலைப்பின் கீழ் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்கு கருதப்பட்டுள்ள ஒப்படைப்புக்குரிய அதிகாரங்களை கீழே அளிக்கப்பட்டுள்ளன.

## I. ஊராட்சி

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| 1. சிறுவனப் பொருட்களின் உற்பத்திக்குப் புத்துயிரூட்டல் | 1. சிறுவனப் பொருட்கள் தரும் மரங்களை நடுவதற்கு விரும்பும் குடும்பங்களைக் கண்டறிவதிலும், சமூகத் தரிசு நிலங்களில் நடுவுதற்குத் தேவையான, சிறுவனப் பொருட்களுக்குரிய மரக்கன்றுகளை வழங்குவதிலும் உதவுதல். |
| | 2. சிறுவனப் பொருட்கள் உற்பத்திக்குத் தேவையான (கோந்து, மூலிகைத் தாவரங்கள், வாசனைத் திரவியங்கள், தழைகள், எண்ணெய் வித்துக்கள், மரப்பட்டைகள் சாயப் பொருட்கள், புல்கள் விதைகள், பிரம்பு, மூங்கில் போன்ற சிறுவனப் பொருள்களை வழங்கும்) மரங்களை குறிப்பாக பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதியில் வளர்ப்பதற்கு ஊக்கப்படுத்துதல். |
| | 3. வறட்சிப் பாதிப்புப் பகுதி திட்டம், சமூகக் காடுகள் திட்டம், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம், மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் சிறுவனப் பொருட்கள் தரும் மரக் கன்றுகளை நடுவதற்கு ஊக்குவித்தல். |
| 2. கிராம கைவினைஞர்களாலும் இதர நபர்களாலும் சிறுவனப் பொருட்களைச் சேகரித்தல். | 1. கிராமக் கைவினைஞர் சிறுவனப் பொருட்களைக் காப்புக் காடுகளிலிருந்து சேகரிப்பதற்கு வனத்துறையிலிருந்து உரிமம் பெறுவதை எளிமையாக்கல். |
| 3. பயிற்சி | 1. சிறுவனப் பொருட்கள் தரும் மரக்கன்றுகளை நடுவதில் பயிற்சிக்குச் செல்ல வேண்டிய பயிற்சியாளர்களைத் தெரிந்தெடுப்பதில் உதவுதல். |

## II. ஊராட்சி ஒன்றியம்

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| 1. சிறுவனப் பொருட்களைச் சேகரித்தல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல் | 1. சிறுவனப் பொருட்களின் சேகரிப்பை மேம்படுத்தவும் அவைகளை விற்பனை செய்வதற்கு முன் தொடக்க நிலையிலேயேப் பதப்படுத்தி தரம் உயர்த்தஉதவுதல். |
| | 2. சிறுவனப் பொருட்களைச் சேகரிப்பவர்களுக்குப் போதுமான சேகரிப்புக் கட்டணங்களைக் குறித்த நேரத்தில் வழங்குவதை உறுதி செய்ய உதவுதல். |
| | 3. ஊராட்சி ஒன்றியப் பகுதியில் சிறுவனப் பொருள்களை மேம்படுத்துதலில், சேகரித்தல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்வதில் வனத்துறை மற்றும் பிற துறைகளால் செயற்படுத்தும் திட்டங்களை நிறைவேற்றுதல். |
| 2. சிறுவனப் பொருட்களின் மீதான திட்டத்தைச் செயல் படுத்துதல் | 1. திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகளை ஊராட்சி ஒன்றிங்களுக்கு ஒப்படைக்க வேண்டும். |

## III. மாவட்ட ஊராட்சி

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
| --- | --- |
| 1. சிறுவனப் பொருட்களைச் சேகரித்தல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தலை மேம்படுத்துவதற்கு திட்டமிடுதல். | 1. சிறுவனப் பொருட்களை உற்பத்தி செய்தல், சேகரித்தல், பதப்படுத்துதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள அமைப் பாளர்கள், பயன்படுத்துவோர் மற்றும் அலுவலர்களின் ஆண்டு மாநாட்டை நடத்துதல். |
| | 2. சிறுவனப் பொருட்களின் உற்பத்தியைக் கொள்முதல் செய்தல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றிற்கு தேவையான கடன் தொடர்புகளுக்கு ஏற்பாடு செய்தல். |
| | 3. மேற்கூறிய அதிகாரங்கள் (1) மற்றும் (2) தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மீது அரசுக்கு ஆலோசனை கூறுதல். |

### நிருவாகச் சிக்கல்கள்

05. சிறுவனப் பொருட்களை மிகப் பெரிய பல்நோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கும் , இதர கூட்டுறவுச் சங்கங்களுக்கும் குத்தகைக்கு விட 14.6.1982 ஆம் நாளிட்ட வனம் மற்றும் மீன்வளத்துறையின் 800 என்ற நிலை எண்ணுள்ள அரசாணையில் சில வழிமுறைகளை வெளியிட்டுள்ளது. சிறுவனப் பொருட்களின் வகையை பருவ காலத்திற்கு முன்பே வழங்குவது பற்றி முடிவு செய்வதற்காக அல்லது அவைகள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையில்லையென்றால், அவற்றை பொது ஏலத்தில் விற்பனை செய்வதற்கும், கூட்டுறவுத் துறை அதிகாரிகள், மிகப் பெரிய பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் மற்றும் இதரத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுடன் கூட்டங்களை நடத்துவதற்கு அனைத்து வனப்பாதுகாவலர்களுக்கும் அரசு அதிகாரம் அளித்துள்ளது.

06. சிறுவனப் பொருட்களின் வணிகத்தை அனைத்து நோக்கங்களிலும் ஆழ்ந்த ஆராய்வு ஒன்றுக்கு சிறுவனப் பொருட்கள் ஆய்வுக்குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. குழுவின் கருத்துக்களின் அடிப்படையில், சிறுவனப் பொருள் பிரிவுகளின் குத்தகையை, பெரிய அளவுடைய பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும், மலைச் சாதியினரால் , ஆதிதிராவிடர்களால் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களால் நடத்தப்பெறும் பிற கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தமிழ்நாடு வனத்துறை விதித் தொகுப்பின் பிரிவு 130 (அ) வின் கீழ் வேலை வாய்ப்பளித்தல் மற்றும் அவர்களின் நலம் மற்றும் பொருளாதார தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஒதுக்கீடு தொடர்ந்து செய்யப்படுகிறது. சிறுவனப் பொருட்களைச் சேகரிப்பதற்கான அடிப்படைப் பிரிவைப் பழங்குடியின கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சலுகை விலையில் அதாவது குத்தகைப் பிரிவுகளுக்கு குறித்து விலைக்கு பத்துக்கும் குறைவான விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பெறுகிறது. நியாயவிலையானது, முந்திய வருடத்தின் ஏல விலையைவிட அதிகமாக இருக்கக்கூடாது எனவும், அரசு அறிவுறுத்தியுள்ளது. இந்திய அரசின் 1996 ஆம் ஆண்டுச் சட்டத்தின் காரணமாக சிறுவனப் பொருட்களின் உரிமையானது குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள ஊராட்சியிலேயே இருக்கும். தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் இதனை சேர்க்கும்போது அத்தகைய விதியை ஊராட்சி நிர்வாகத்தின் கீழ் இந்த உரிமை வருவதால் தற்பொழுது வனத்துறையால் வழங்கப்பெறும் இந்த அனுமதி பொருந்தாது.

### நிதிச் சிக்கல்கள்

07. வனத்துறையின் மூலம் சிறுவனப் பொருட்களை மேம்படுத்துவதற்கு மாநில அரசால் அளிக்கப்பட்ட நிதியுதவி 1994–95 இல் ரூபாய் 1.11 கோடியாகும். காப்புக் காடுகளில் உள்ள சிறுவனப் பொருட்களின் மேம்பாட்டிற்காக

மாநில மற்றும் மைய அரசால் தொடங்கப்பட்ட திட்டங்களின் கீழான முதலீடு ஆண்டுக்கு ரூபாய் 1.00 கோடி ஆகிறது. இதற்காக திட்டம் சாராப் பணிகளின் மானியத்தை தெரிந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றம் செய்யலாம். மேலும் திட்டங்களைச் செயல்படுத்தும் உரிமையை அவர்களிடம் ஒப்படைக்கலாம். இத்திட்டங்களை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைப்பதே சிறந்ததாகும் என்று மாநிலத் திட்டக்குழு பிரிவு கருதுகிறது.

### சட்டச் சிக்கல்கள்

08. தமிழ்நாட்டிலுள்ள காடுகளைப் பாதுகாக்கவும் நிருவகிக்கவும் பின்வரும் சட்டங்களும் விதிகளும் நடைமுறையிலுள்ளன.

1. 1882–ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச் சட்டம்
2. 1949–ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் காடுகளைப் பேணிவளர்த்தல்.
3. 1995–ஆம் ஆண்டு தமிழ்நாடு மலைப் பகுதி (மரங்களைப் பேணி வளர்த்தல்) சட்டம்.
4. 1972–ஆம் ஆண்டு வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம்
5. 1986–ஆம் ஆண்டு சுற்றுபுறச் சூழல் பாதுகாப்புச் சட்டம்.
6. 1980–ஆம் ஆண்டு வனப் பேணுகைச் சட்டம்.

மேற்கண்ட வனச் சட்டங்களில் முதல் நான்கு சட்டங்கள், தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டவை. கடைசியில் உள்ள இரண்டு வனச் சட்டங்கள் இந்திய அரசால் இயற்றப்பட்டவையாகும். 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டமானது (1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம்21), பாதுகாக்கப்படாத காடுகள் தொடர்பில் ஊராட்சிக்கும், ஊராட்சி ஒன்றியத்திற்கும் சில அதிகாரங்களை வழங்கியுள்ளது. மேற்கூறியவற்றின் துணை கொண்டு பார்க்கையில் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்க வேண்டி தெரிவித்த அதிகாரங்களை உரிய சட்டங்களில், விதிமுறைகளில், விதி தொகுப்புகளில், சேர்ப்பதற்குத் தேவையான திருத்தத்தை மேற்கொள்ளலாம்.